நம்பிக்கை நம்மை மீட்கிறது மற்றும் நன்றியுணர்வுக்கு வழிவகுக்கிறது.

கடவுளை நம்பும் திறனைப் போல நன்றியுணர்வு இயல்பாக வருவதில்லை என்பது மிகவும் வருந்தக்கூடியது. முதல் வாசகத்திலும், நற்செய்தியிலும் கடவுளுக்கு நன்றி செலுத்த திரும்பவும் வந்த இரண்டு நபர்களும் புறவினத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் சிரியா நாட்டினர், மற்றவர் சமாரியர். அவர்கள் ஏன் திரும்பிவந்தார்கள்? இதற்கான விளக்கம் ஒருவேளை அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருப்பதைக் காணலாம். நாம் அருளைப் பெற்றுக்கொள்ள உரிமை இல்லாதநேரத்தில் நாம் பெற்றுக்கொண்ட அருள்கொடைகளுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம். நாம் கேட்காமலே அல்லது உரிமை கோரப்படமலே கிடைக்கும் ஆசீர்வாதங்கள் நமக்கு வழக்கமாகிவிடும்போது அது அருள் என்பதை நாம் எளிதில் மறந்துவிடுவோம். (2022 இயேசு சபையின் மறையுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி)

பத்து தொழுநோயாளிகளில் பத்து பேருக்கும் குணமளித்தல் என்னும் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் அந்தப் பரிசுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும் என்ற நன்றியுணர்வாக சமாரியன் மீட்பைக் கண்டார். நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுகளை அங்கீகரிப்பதிலும், யாருக்கு நாம் நன்றிசெலுத்தவேண்டும் என்பதை அறிந்துகொள்வதிலும் தான் நமது மீட்பு காணப்படுகிறது.

இந்த நன்றியுணர்வு மனப்பான்மை இருப்பது, சில விஷயங்ளில் மோசமானதாக இருக்கலாம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் நன்றியுள்ளவர்களாக இருக்குபோது, இன்றைய திருவிருந்துப் பல்லவியான “ஆண்டவரை நாடுவோருக்கு எதுவும் குறைவுபடாது” என்று கூறுவதுபோல, கடவுள் நமக்குத் தேவையானதை வழங்குவார் என்று நாம் நம்பிக்கையுடன் இருப்போம்.

நாம் கடவுளை நம்பி, அவரைச் சார்ந்து வெற்றியடையும்போது நம் செயல்களால் தான் நிறைவேறியது என்று எண்ணாமல், நம்மிடமிருந்து எதிர்ப்பார்ப்பது, நம்மால் இயன்றதை செய்வதும் மற்றவற்றைக் குறிப்பாக நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவற்றைக் கடவுளின் கைகளில் விட்டுவிடுவதும் ஆகும்.

காணிக்கை மன்றாட்டான “ஆண்டவரே, நாங்கள் ஒப்புக்கொடுக்கும் இப்பலியின் காணிக்கைகளோடு நம்பிக்கையாளர்களின் வேண்டல்களையும் ஏற்றருளும். இவ்வாறு இறைப்பற்றோடு நாங்கள் ஆற்றும் இப்பணியால் விண்ணக மாட்சிக்குக் கடந்து செல்வோமாக” என்னும் இறைவேண்டலை நாமும் மன்றாடுவோம்.

எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள், உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.

1 தெசலோனிக்கர் 5:18

**இன்றைய இறைவார்த்தை:**

2 அரசர்கள் 5: 14-17

திருப்பாடல்: 98: 1-4

2 தீமோத்தேயு: 2: 8-13

லூக்கா 17: 11-19

INTERNAL CIRCULATION ONLY
BUL 41/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 28 ஆம் ஞாயிறு | 12 அக்டோபர் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சமுதாயம் (இறைவாக்குரைத்தல்)
நற்செய்தி மதிப்பீடுகளை வலுப்படுத்த அழைப்பு

# காப்பாற்றும் நம்பிக்கை

இன்று நாம் 10 தொழுநோயாளிகளை இயேசு எவ்வாறு குணப்படுத்துகிறார் என்பதைப் பற்றி வாசிக்கிறோம். தொழுநோயால் பாதிக்கப்பட்ட பத்துபேரும் இயேசுவை நோக்கிக் கூக்குரலிடுகிறார்கள். அவர்கள் மீது பரிவுகொண்ட இயேசு 10 பேரையும் குணப்படுத்துகிறார். இன்று மீட்பு என்னும் நன்றியுணர்வு நம்பிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

